**பதவிய பிரதேச சபை**
**அனுராதபுரம் மாவட்டம்**

---------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

-----------------

**1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

--------------------------------

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2020 பெப்ரவரி 28 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 மே 19 ஆம் திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 08 ஆம் திகதியும், தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

1.2 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

-------------------------------------

நிதிக் கூற்றுக்களில் ஆம் திகதி பதவிய பிரதேச சபையின் பதவிய பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

(அ) **செலுத்த வேண்டிய கணக்குகள்**

---------------------

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| 03 ஆண்டுகளைக் கடந்தும் நிலவி வரும் ரூபா. 652,134 பெறுமதியான செலுத்த வேண்டிய 03 கணக்கு நிலுவைகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஓய்வூதிய சம்பளத் திணைக்களத்திடம் தகவல்கள் வினவி கடிதம் அனுப்பப் பட்டுள்ளது. |

**(ஆ) கணக்காய்விற்கு போதிய எழுத்து மூலச்சான்றுகள் இன்மை**

------------------------------------------------------------------------------

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| பெறுமதி ரூபா 336,661,047 ஆகவுள்ள 05 கணக்கீட்டு விடயங்கள் தொடர்பாக திருப்திகரமான முறையில் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை. | நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளின் பெறுமதியை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றேன் |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவீனம் ரூபா 825,563 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவீனம் ரூபா 1,208,442 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பிட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பிட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா. | ரூபா | ரூபா. |
| (i) | வீதவரியும் வரியும் | 260,000 | 151,000 | 151,000 | - | 1,050,000 | 1,091,230 | 1,091,230 | - |
| (ii) | வாடகை | 4,568,000 | 2,758,250 | 2,747,450 | 10,800 | 3,461,800 | 3,042,219 | 3,042,219 | - |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,660,000 | 1,269,790 | 1,269,790 | - | 181,000 | 246,629 | 246,629 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 1,317,500 | 3,498,746 | 2,402,599 | 1,096,147 | 1,108,500 | 1,319,227 | 988,782 | 976,572 |
| | | 7,805,500 | 7,677,786 | 6,570,839 | 1,106,947 | 5,801,300 | 5,699,305 | 5,368,860 | 976,572 |

#### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை நிர்வாகப் பிரதேசத்தினுள் மேம்படுத்தப்பட்ட பிரதேசங்கள் இனங்காணப்பட்டு வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட வீதவரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134 ஆம் பிரிவின் பிரகாரம் வீதவரி அறவிடப்பட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மேம்படுத்தப்பட்ட பிரதேசங்கள் இனங்காணப்பட்டு வரைபடமாக்கியுள்ளது. ஏதிர்காலத்தில் வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட வீதவரி அறவிடப்பட நடவடிக்கை எடுப்பேன். |

2.2.3 **நீதிமன்ற தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

(அ) **நீதிமன்ற தண்டப்பணம்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையில் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2019 திசெம்பர் 31 இல் பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணத் தொகை ரூபா. 695,147 ஆக இருந்தது. | நீதிமன்ற தண்டப்பணத்தொகை அறியப்பட்டு விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நீதிமன்ற தண்டப்பணத்தொகையை அறவீடு செய்யத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

(ஆ) **முத்திரைக் கட்டணங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மாகாண சபையில் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2019 திசெம்பர் 31 இல் பெற வேண்டிய முத்திரைக் கட்டணத் தொகை ரூபா. 401,000 ஆக இருந்தது. | முத்திரைக் கட்டண வருமானம் வருடத்தினுள் கணக்கீடு செய்யப்பட்டு விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான கருதுகோள் பெறுமதி கொண்டுவரப்பட்டிருப்பதுடன் உண்மைப் பெறுமதி தேடப்பட்டு அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

03. **செயற்பாட்டு மீளாய்வு**

3.1 **செயலாற்றல்**

பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் மக்களுக்கான பாதைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும், மக்களின் நலன், வசதிகள், நலன்புரிகள் உள்ளிட்ட சபை நிறைவேற்ற வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

(அ) **உப விதிகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| பிரதேச சபை சட்டம் 126 | உப விதிகள் | 28 பிரதானமான விடயங்களை |

| | | |
|---|---|---|
| பிரிவின் கீழ் 28 பிரதானமான விடயங்களை நிறைவேற்றுவதற்கான துணை விதிகள் பிரயோகிக்கப்பட்டிருக்கவில்லை. | பிரயோகிக்கப்பட வேண்டும். | நிறைவேற்றுவது தொடர்பாக பொதுவாக பிரயோகிக்கப்பட்ட உப விதிகள் பின்பற்றப்பட்டுள்ளது. |

(ஆ) **செயல்நடவடிக்கை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை மூலம் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளுக்கான வருடாந்த செயல் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சபை மூலம் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகள் மற்றும் பணிகள் தொடர்பான செயல் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

(இ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பில் சபை மூலம் கொண்டுவரப்பட்ட செயற்பாடுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை அறிவுருத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | உரிய சுற்றறிக்கைகள் ஆய்வு செய்யப்பட்டு எதிர்காலத்தில் செயற்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. |

3.2 **சர்ச்சைக்குரிய தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஜனவரி 01 இல் ரூபா. 109,033,257 பெறுமதியான சபைக்கு சொந்தமாக இருந்த நிலையான சொத்துக்களின் பெறுமதி சபை மூலம் நியமிக்கப்பட்டிருந்த குழுவின் மதிப்பீட்டின் அடிப்படையில் ரூபா. 393,877,929 என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தமையால் நிலையான சொத்துக்களின் பெறுமதி 361 சதவீதத்தினால் கூடுதலாகக் காணப்பட்டது. | சொத்துக்கள் மதிப்பீடு செய்தல் நிபுணத்துவம் உள்ள அதிகாரிகள் மூலம் மேற்கொள்ளப்படல் வேண்டும். | நிலையான சொத்துக்களாக நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஆவணங்களுக்குக் கொண்டுவரப்படாத மற்றும் நிகழ்கால வியாபார நிலையப் பெறுமதியின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதால் பெறுமதி இப் பெறுமானத்திலும் உயர்வாக காணப்படுகிறது. |

3.3 **சொத்து முகாமைத்துவம்**

3.3.1 **பயன்பாடற்ற / குறை பயன்பாடுடைய சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 02 தொடக்கம் 05 வருடங்கள் வரையான காலப்பிரிவில் ரூபா. 1,620,000 பெறுமதியுள்ள சொத்துக்கள் பயன்பாடற்று இருந்தன. | புயன்படுத்தக் கூடிய சொத்துக்களை பழுது பார்த்து பயன்படுத்தவோ அல்லது ஒதுக்குவதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டும். | இலக்கம் LE -7506 உடைய கெப் வாகனம் பழுதுபார்ப்பதற்கும் RD -9451 டிரக்டர் பயன்படுத்தவோ அல்லது மீண்டும் கையளிப்பதற்கும் ஏனைய பயன்பாடற்ற சொத்துக்கள் வாடகைக்கு அல்லது ஏலத்தில் விடவும் நடவடிக்கை எடுப்பேன். |

**04.** **கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வடமத்திய மாகாண உள்ளுராட்சி ஆணையாளரின் 2015 மார்ச் 18ஆம் திகதிய 04/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 06 ஆம் பந்திக்கு இணங்க நேரடியாக பொறுப்புக்கூறும் உள்ளக கணக்காய்வு அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | உள்ளக கணக்காய்வு அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன், பதவியணியினர் பற்றாக்குறை காரணமாக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. |